# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **335/2016**

ஆணை எண். **96/2016**

நாள் : **25/05/2016**

**திரு. எல். அசோக்குமார்,**
**திரு. பி. கோபால்சாமி,**
**திரு. எஸ். செந்தில்,**
**ஈரோடு.** — **முறையீட்டு மனுதாரர்கள்**

**துணை மேயர் /**
**வது மண்டல தலைவர்,**
**ஈரோடு மாநகராட்சி,**
**ஈரோடு.** — **எதிர் மனுதாரர்**

**அரசின் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை மூலமாக, ஈரோடு நகரைச் சேர்ந்த திருவாளர்கள் எல். அசோக்குமார், பி. கோபால்சாமி மற்றும் எஸ். செந்தில் ஆகியோரின் புகார் மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 21.12.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 335/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப்** பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

ஈரோடு மாநகராட்சியைச் சேர்ந்த திருவாளர்கள் எல். அசோக்குமார், பி. கோபால்சாமி மற்றும் எஸ். செந்தில் ஆகியோர் மேற்படி மாநகராட்சி.ன் துணை மேயர் மற்றும் மண்டலத் தலைவர் திரு. மனோகரன் ஆகியோர் தெரிவித்துள்ள புகார்கள் மீது ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மாநகராட்சியின் கனி மார்க்கெட் வளாகத்தில் உள்ள கடைகளுக்கு மாத வாடகை அடிப்படையிலும் வாரச்சந்தைக்கு (ஜவுளி) வருட குத்தகை அடிப்படையிலும் ஏலம் விடப்பட்டு ஏலதாரரால் வசூலிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார். முறைகேடாக மேற்படி கடைகள் மற்றும் வாரச்சந்தையில் வாடகை வசூலிப்பதில் மாநகராட்சி துணைமேயர், மண்டலத்தலைவர் ஈடுபடுவதில்லை என

தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகள் ஈரோடு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பின்பு சொத்து வரி விதிப்புகள் 96,609 லிருந்து 1,28,313க்கு உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், அனைத்துத் திட்டப்பணிகளும் முறையாக மன்றத்தின் அனுமதி பெற்றே செயல்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டப்பஞ்சாயத்து, ரியல் எஸ்டேட் மற்றும் கந்துவட்டிப் பணிகளில் துணை மேயரோ, மண்டலத் தலைவர்களோ ஈடுபடுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள ஈரோடு அரசு மருத்துவமனை அருகில் மேம்பாலம் (ம) ரவுண்டானா பணிகள் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தது என்றும் அப்பணிகள் செயல்படாததற்கு துணை மேயரையோ அல்லது மண்டலத் தலைவரையோ பொறுப்பாக்க இயலாது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். மனுதாரர்களான மூவரும் தங்களது உண்மையான முகவரியைத் தெரிவிக்கவில்லை எனவே அவர்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணைகள் திரும்ப வரப்பெற்றன. எனவே போலியான பெயரில் மேற்படி புகார் மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன என தெரியவருகிறது. இந்நிலையில் அனைத்தும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, ஈரோடு மாநகராட்சி ஆணையரின் அறிக்கையினை ஏற்றுக்கொள்வதென முடிவு செய்து இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி பதிவாளர்.

பெறுநர்

மாநகராட்சி ஆணையர்,
ஈரோடு மாநகராட்சி, ஈரோடு.
(மாநகராட்சி மேயர், துணை மேயர் (ம) மண்டலத் தலைவர்
ஆகியோரின் பார்வைக்கு சமர்ப்பிக்கவும்

துணைச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
சென்னை – 9
(கடித எண்.30242 /தேர்தல் / 2015, நாள் 15.12.2015சம்பந்தமாக)